# தன்மானத் தமிழர்களின் உறுதியான கவனத்திற்கு,

உங்களுக்கு எங்கள் அன்பான வாழ்த்துகள்.

மற்ற மாநிலங்களைப் போன்று தமிழ் நாட்டைத் தமிழரே ஆளுமாறு தமிழ் இன ஒற்றுமையை உருவாக்கும்

**சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்பு மாநாடு –** அறிக்கையும் அதன் இணைப்புப் பகுதிகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## கூட்டமைப்பின் தோற்றம்

தமிழ் நாட்டுக் கோவில்களில், அர்ச்சனை, குடமுழுக்கு, தமிழ்த் திருமணங்கள் முத–யவற்றை நடத்தி வைக்கும் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்களை இழிவுபடுத்தி, அவமதிக்கும் கட்டுரை ஒன்று தமிழ் நாளிதழ் ஒன்றன் வார மலரில் 27–11–2009 அன்று வெளிவந்தது. அதைப் படித்தவர்களின் உள்ளங்கள் கொதிப்படைந்தன. தன்மான உணர்வு பொங்கி எழுந்தது.

கட்டுரையைக் கண்டிக்கும் நிலையில் 27–12–2009 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தின் வழியாக, "அனைத்துத் தன்மானத் தமிழர் கூட்டமைப்பு" உருவாக்கப்பட்டு, தமிழர் மானத்தைக் காக்கும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு, இப்பொழுது இந்த மாநாட்டை நடத்த முன் வந்துள்ளது. இதில் நமக்குக் கிடைத்துள்ள அனுபவம் மிகவும் விந்தையானது. இதன் காரணமாகவே அறிக்கையின் இரண்டாம் பகுதியிலுள்ள தன்மானத் தமிழர் பற்றிய விளக்கம் எழுந்துள்ளது.

## அழிவுக்குக் காரணம் ஆணவம்

இந்த மாநாட்டு அறிக்கையின் 4ஆம் பகுதியாகிய தமிழர் ஆன்மவியல் பகுதியில் **"ஆணவமாகிய அடிமைத்தளை"** என்னும் குறுந் தலைப்பிலுள்ள செய்தியைக் கூர்ந்து நோக்க உங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

அப்பகுதியில் **'தமிழ் இன அழிவுக்குக் காரணம் தமிழ் இனத்தைக் கட்டியுள்ள ஆணவமாகிய அடிமைத்தளை'** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணவமாகிய அடிமைத் தளையின் வழி தமிழ் இனம் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது.

## மாநாடு கட்டாயம்

ஆணவமாகிய அடிமைத்தளை சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையின் வழி, தமிழ் இனத்தவர்களின் உள்ளங்களில் வேற்றவர்களால் புகுத்தப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளமையால் அதை அகற்றுவதற்காகச் சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்பு மாநாடு நடத்த வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் முக்கிய நோக்கங்களாக,

1. மற்ற மாநிலங்களைப் போன்று தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்
2. தமிழ் இனத்தின் ஒற்றுமையைச் சிதைக்கும் சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டும்

ஆகிய இரண்டும் குறிக்கப்படுகின்றன.

## தமிழ் அமைப்புகள் மீது குற்றச்சாட்டு

தமிழ் நாட்டிலுள்ள தமிழ் அமைப்புகளில் பல (1) ஆன்மீக வேடத்தில் நம்மிடம் வந்து நம் உள்ளங்களில் ஆணவத்தைப் புகுத்திய வேற்றவர் (2) படையுடன் வந்து நம் நாட்டைக் கவர்ந்து நம்மை அடிமைப்படுத்திய வேற்றவர் ஆகிய இரு பகுதியினராகிய வேற்றவர்களின் செல்வாக்கின் கீழ், தமிழ் இனத்திற்கு எதிரான சிந்தனையுடையனவாக இயங்கிக் கொண்டிருக்கின்றன என்னும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## கட்டாயக் கடமை

இதைப் பற்றி மாநாட்டு அறிக்கையின் இரண்டாம் பகுதி விளக்கு கிறது மன்னர் ஆட்சி நீக்கப்பட்டு. மக்கள் ஆட்சி நடைபெறும் இந்நாளில் அந்நியர்களால் தமிழ் இனத்தவரின் உள்ளங்களில் புகுத்தப்பட்டுள்ள, ஆணவமாகிய அடிமைத்தளையை நீக்க வேண்டிய கட்டாயக் கடமை, தமிழ் இனத்தையும் தமிழ் மொழியையும் அழிவி–ருந்து காக்க நினைக்கும் தன்மானத் தமிழர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள்.

## அடிமைகளின் நாடு

இந்த நிலையில் தமிழ் இனத்தையும் தமிழ் மொழியையும் காக்கும் நோக்கில் நடத்தப்படும் இந்த மாநாட்டைத் தன்மானத் தமிழர் அனைவரும் இணைந்து நடத்த வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுள்ளது. ஆனால், **அடிமையாய் இருப்பதில் சுகம் காணும் தமிழர்** எவ்வளவு பேர் அந்நிய ஆதிக்கத்தி–ருந்து விடுபட்டு நம்மோடு இணைவார்கள் என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. அடிமைகளின் நாட்டில் இந்தக் கேள்விகுறி ஏற்படுவது இயல்பான ஒன்றே ஆகும். அடிமைகளின் நாட்டில் செல்வாக்கோடு இருப்பவர்கள் அந்நியர்களின் ஆதரவாளர்களாக இருப்பதும் இயல்பான ஒன்றே ஆகும்.

## பொதுநல அனுபவம்

ஆகவே, மிகவும் இக்கட்டான நிலையில், தியாகம், இழப்பு, துன்பம் ஆகிய மூன்றையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் பொதுநல அனுபவமுள்ளவர்களே இதில் இணைந்து பணியாற்ற இயலும் என்பது சொல்லாமலே புரியக் கூடிய ஒன்றாகும்.

## ஆயிரம் பேர் மட்டுமே

உணர்வுள்ள தன்மானத் தமிழர், தமிழ் நாடு முழுவதும் பல ஆயிரம் பேர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், மாநாடு நடைபெற இருக்கும் பெரியார் திட–லுள்ள, எம். ஆர். ராதா மன்றத்தில் ஆயிரம் பேர் மட்டுமே அமர்வதற்கு இடம் இருக்கிறது.

## செய–ல் காட்டுங்கள்

இந்த நிலையில் கொள்கையும் உறுதிப்பாடும் உள்ள தன்மானத் தமிழர்கள் மட்டுமே மாநாட்டில் பங்கு பெறுமாறு திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. தியாகம், இழப்பு, துன்பம் ஆகிய மூன்றிலும் மகிழ்ச்சியடையும் பொது நல மனப்பான்மையுள்ளவர்கள் மட்டுமே **மாநாட்டுப் பங்காளர்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றார்கள்.** மாநாட்டை நடத்தும் பொறுப்பில் மாநாட்டுப் பங்காளர்களுக்குரிய பங்கு இருக்கிறது. அதற்குரிய அவர்களுடைய பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

நீங்கள் தன்மானத் தமிழரா? நீங்கள் ஏற்கும் இழப்பு என்ன? **"உங்கள் உள்ளத்தை உங்கள் செய–ல் காட்டுங்கள்"** என வேண்டுகின்றோம்.

தங்கள் அன்புள்ள,
**(மு. தெய்வநாயகம்),**
ஒருங்கிணைப்பாளர்.

தொடர்பு முகவரி
**பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகம்,**
ஒருங்கிணைப்பாளர்,
அனைத்துத் தன்மானத் தமிழர்களின் கூட்டமைப்பு
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை–600 023.
☎ +9144–26743842; 9444817394; 9840003842
Email: tamilarsamayam2010@gmail.com